**திண்டுக்கல் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(30-09-2015 – 04-10-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 29-09-2015

**கடந்த கால வானிலை 25-09-2015 முதல் 28-09-2015 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 40.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 37-38 |
| குறைந்த படச வெப்பநிலை (செ) | 23-24 |
| மேக மூட்டம் | 5-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 42-76 |
| காற்றின் வேகம்(கி.மீ/மணி) | 5-18 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 04-10-2015 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 30.09.15 | 01.10.15 | 02.10.15 | 03.10.15 | 04.10.15 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 4 | 4 | 3 | 0 | 1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 34 | 34 | 35 | 35 | 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 25 | 25 | 25 | 25 | 26 |
| மேக மூட்டம் | 7 | 7 | 7 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 76 | 74 | 72 | 74 | 72 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 58 | 56 | 54 | 56 | 54 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

குறுஞ்செய்தி :

அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை: அக்டோபர் 3-ம் தேதி தவிர மற்ற நாட்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: பருத்தி, மக்காச்சோளம், வாழை, கரும்பு மற்றும் காய்கறிகள்**

**பருவம்: பருத்தி- முளைக்கும் பருவம், மக்காச்சோளம்- விதைத்தல் பருவம், கரும்பு- தூர் கட்டுதல் பருவம்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது எனவே மண் மற்றும் பயிரின் வளர்ச்சியை பொருத்து தண்ணீர் பாய்ச்ச ஏற்ப்பாடு செய்யலாம்.
- வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மழையைப் பயன்படுத்தி வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் மானாவாரியில் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக மானவாரி நிலங்களை உழவு செய்யவும்.
- மானாவாரியில் மண் மற்றும் ஈரத்தை பாதுகாக்க முறையாக நிலத்தை சட்டிக்கலப்பையை பயன்படுத்தி ஆழமாக உழவு செய்யலாம்.
- கடைசி உழவிற்கு முன்பு தொழு உரம் அல்லது கம்போஸ்ட் 12.5 டன் எக்டர் என்ற அளவில் இடவும். ரோட்டோவேட்டர் கருவியை பயன்படுத்தி நிலத்தை நன்கு பண்படுத்தவும்.
- வரும் வானிலை பயன்படுத்தி விவசாயிகள் மக்காச்சோளம் நடவுதற்கு ஏற்றவாறு நிலத்தை தயார் செய்து படுக்கையை ஏற்படுத்தி விதைக்க அறிவுறுத்தப்படுகின்றன.
- எலுமிச்சை இலை சுருட்டு புழுவை கட்டுப்படுத்த லிட்டருக்கு 2மி.லி. குயினால்பாஸ் 25 இசி என்ற அளவில் தெளிக்கவேண்டும்.